RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22141

OPEN ACCESS

# தணிகைச்செல்வன் கவிதைகளில் மொழி பற்றிய சிந்தனைகள்

சு. உமாராணி [அ, *], சி. அங்கயற்கண்ணி [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு - 638004, தமிழ்நாடு, இந்தியா

# Thoughts on Language in Thanigaichelvan's Poems

S. Umarani [a, *], C. Angayarkanni [a]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode – 638004, India

* Corresponding Author: umarani8478@gmail.com

Received: 09-11-2021
Revised: 13-01-2022
Accepted: 20-01-2022
Published: 30-01-2022

Check for updates

## ABSTRACT

Language is something indispensable to everyone in the world. The urge to express one's own feelings and thoughts, as well as the desire to understand the feelings of others, can be considered the foundations for the emergence of language. Language is a rare art created and preserved by people. It is also a valuable tool that nurtures and elevates the knowledge of the people. Therefore, language is not only an art but also serves as a means to grow knowledge and eliminate ignorance. He passionately asserts that Tamil should be the first language and that using Hindi or English as a second language should be avoided, and education everywhere should be in Tamil alone. It can also be understood that Thanikai Selvan believes that introducing other languages as a second language leads to language mixing and the deterioration of the language. His slogan in his songs is that Tamil should be everywhere, in everything, and in all contexts.

**Keywords:** Thanikai Selvan, Language, Knowledge, Poems

## முன்னுரை

மொழி என்பது உலகமாந்தர் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். தம்முடைய உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளியிட வேண்டும் என்ற துடிப்பும் பிறர் உணர்வுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் மொழி தோன்றுவதற்கான அடிப்படைகள் எனலாம்.

'மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை மொழியே. மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது." (தணிகைச்செல்வன்., 2001) எனவே மொழி என்பது கலையாக மட்டுமல்லாமல் மக்களின் அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாகவும் விளங்குகிறது.

## தமிழ்மொழியின் பெருமை

தமிழர் வாழ்வு சிறக்க வேண்டும். என்று கூறுவது தமிழ்மொழி உயர்வான இடத்தைப் பெறுவதையும் தமிழர்களின் வாழ்க்கை உயர்வதையும் குறிப்பதாகும். தமிழர்கள் உயர்பதவிகள் வகிக்க வேண்டும். தமிழ்மொழி சிறப்புற்று விளங்க வேண்டும் இவ்வாறு தணிகைச் செல்வன் கூறுகிறார்.

'தமிழர் வாழ்வு சிறக்க வேணும் யாருமறுப்பான் - அதில்
தமிழ் மொழியும் சிறக்கும்." (தணிகைச்செல்வன்., 2001)

தமிழர்கள் தங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் அவர்களின் மொழியின் வாயிலாகவே வெளிப்படுத்துவார்கள். அப்பொழுதுதான் அவர்களின் வாழ்வு சிறக்கும்

'தமிழர்கள் தங்களை மொழியின் மூலமாகவே

அறிமுகப்படுத்திக் கொண்டனர்." (கிருஷ்ணன் ப.,2000)

தமிழர்களின் மதிப்பும் அவர்களின் நலனும் எப்போதும் உயர்ந்த நிலையில்தான் உள்ளன. அதற்குக் காரணம் அவன் மொழி மீது கொண்டுள்ள பற்றும் மதிப்பும் எனலாம்.

'தமிழனைப் பற்றித் தமிழ் மக்கள் நலம்

தமிழ் மக்கள் தன் மதிப்பு என்பதல்லாமல்

வெறும் மொழியைப் பற்றி நான் எவ்விதப்

பிடிவாதம் கொண்டவனுமல்ல." (நன்னன். மா.,1998)

என்று மா. நன்னன் கூறுகிறார்.

தமிழையும் தாயையும் நாம் ஒன்றுபடுத்திக் காட்டுவது நம் மொழிப்பற்றை உணர்த்துவதாகவும் பெண்மையை உயர்வுபடுத்துவதாகவும் உள்ளது.

தமிழ்மொழி எல்லா வல்லமையும் கொண்ட மொழியாகும். பழமையான மொழி என்றும்இ 'உலகத்தில் சிறந்த மொழி என்றும் போற்றலாம். 'தமிழ்மொழி எல்லா மொழிகளைவிடச் சிறந்த மொழி எனலாம்." (நன்னன். மா.,1998) பாரதிதாசன் கூறுவது

'செந்தமிழே உயரே!! நறுந்தேனே!

செயலினை மூச்சினை உனக்களித்தேனே!" (வைத்திலிங்கம் மு.,1991)

தமிழைச் செம்மையான தமிழேஇ என் உயிரே என்றும்இ நறுந்தேனே என்றும்இ என்னுடைய உணர்வுகளும் செயல்களும் ஆன மூச்சுக்காற்றே! என் உயிரை உனக்கு நான் தருகிறன் என்று கூறுகிறார்.

'தமிழின் உயிர் புத்தகத்தில் வாழ்வத்தில்லீங்க-வாழும்

தமிழர்களின் உயிரிலேதான் தமிழும் வாழுங்க." (தணிகைச்செல்வன்., 2001)

தமிழர்களின் வாழ்வும்இ அவர்களின் வளர்ச்சியும்இ உயிரும் புத்தகத்தில் வாழ்வதில்லை அவர்களுடைய உயிரிலும் தமிழர்களின் உணர்வுகளிலும்இ தமிழிலும் வாழுகின்றது. அவர்களின் வாழ்வு செழிக்க வேண்டும். என்றால் தமிழ் செழித்து வாழ வேண்டும் என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

## தமிழ்ப்பற்று

"வெண்ணிலாவும் வானும் போல

வீரனும் கூர்வாளும் போல!" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழர்களின் மொழியும்இ தமிழ்மீது கொண்டுள்ள பற்றும் எவராலும் பிரித்துக் கூற இயலாது. வெண்மையான நிலாவும் வாளத்தில் வென் மேகங்கள் போலவும்இ வீரர்களுடைய கூர்மையான வாளும் போன்றது.

"வண்ணப்பூவும் மணமும் போல

மகர யாழும் இசையும்போல" (தணிகைச்செல்வன்., 2001)

பல வண்ணங்களைக் கொண்டு பூவும்இ அவற்றின் மீது கொண்டுள்ள மணம் எப்போதும் நறுமண்தை வீசுகிறது. அது போலவே தமிழர்களின் வண்ணமும் அவர்களின் பற்றும் மற்றும்

மகரயாழும்இ இசையும் எப்படி உள்ளதோ அதுபோல அவர்களின் உள்ளத்தில் எழுந்துள்ள தமிழ் என்ற இசை அவனைப் பற்றுள்ளவனாகச் சிறப்படையச் செய்யும் என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

‘இரண்டு தமிழ் இருக்குதுன்னு புரிஞ்சுக்கிட்டேண்டி-இதில்

இரண்டாந் தமிழ் ஜனங்கதாண்டி நாலைரைக்கோடி!” (தணிகைச்செல்வன்., 2001)

பண்டிததமிழ்இ பாமரத்தமிழ் என இருவகைப்படுத்திக் கூறுகிறார். தணிகைச்செல்வன். அதில் பாமரர்கள் மட்டும் நாலரைக் கோடி என குறிப்பிடுகிறார். பணக்காரர்இஏழை என இருவகைப்படுத்துகிறார் என்று கொள்வதற்கும் இடமுண்டு ஏழை மக்கள் நாலரைக் கோடி எனக் குறிப்பிடுகிறார்.

## பாரதியாரின் மொழிப்பற்று

‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவ தெங்கும் காணோம்." (பாரதியார்.,1998)

நாம் அறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல் சிறந்த மொழி இந்த உலகத்தில் இல்லை. ஆகவே இனிமையான மொழி தமிழ்தான் என்று கூறுகிறார் பாரதியார்.

‘கொடுப்பதும் தாய்மொழியில்

கொள்வதும் தாய்மொழியில்" (தணிகைச்செல்வன்., 2001)

நாம் எதைக் கொடுத்தாலும் எதை வாங்கினாலும் அதில் தாய்மொழியான தமிழ்தான் முதலில் இருக்க வேண்டும். நாம் ஆரம்பத்தில் படிக்கின்ற படிப்பு முதல் பாராளுமன்றம் வரை தமிழ் மொழியையே கையாள வேண்டும் என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

## தேசியத்தில் மொழி உணர்வு

இந்திய தேசியத்தில் இந்திக்கு முதல் இடமும்இ ஆங்கிலத்திற்கு அடுத்த இடமும் தரப்படுகிறது. ஆனால் தமிழ் புறந்தள்ளப்படுகிறது. தமிழின் நிலை தாழ்ந்த நிலையில்தான் உள்ளது. அதை மாற்றித் தமிழைச் சமமான நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

‘கல்வியிலே இறுதிவரை கற்பதெல்லாம் தமிழ்மொழியில்!

டில்லிமுதல் சென்னை வரை ஆளுவது தமிழ் மொழியில்" (தணிகைச்செல்வன்., 2001)

நாம் கற்கக் கூடிய மொழிகள் நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருக்க வேண்டும். இந்தியாவின் தலைநகரம் டில்லி எனலாம். ஆனாலும் அங்கும் தமிழ் மொழி சிறந்து விளங்க நாம் பாடுபட வேண்டும். என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

‘ஊர் நீதி மன்றம் முதல் உச்சிவரை தமிழ்மொழியில்

பார் ஆளும் ஐ.நாவில் பேசுவது தமிழ் மொழியில்" (தணிகைச்செல்வன்., 2001)

ஊர்களில் உள்ள நீதிமன்றங்கள் முதல் உச்ச நீதிமன்றங்கள் வரையிலும் தமிழ்மொழி சிறக்க வேண்டும். அதிலும் தமிழ் மொழியில் வாதாட வேண்டும். இந்த உலகத்தை ஆளுகின்றவர்கள் பேசுகின்ற பொழுதும் அவர்கள் பயன்படுத்துகின்ற மொழியாய் அமைய வேண்டும் என்று கூறுகிறார் தணிகைச்செல்வன்.

## ஏழையின் வாழ்வில் தமிழ்

'தமிழே! தமிழே!

தாயே தமிழே!

எங்கள் குடிசைக்கு

எப்போது வருவாய்!" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழே தாயே ஏழைகளின் வாசலில் வரவேண்டும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பர். அதுபோல் எங்கள் குடிசைக்குத் தாயே தமிழே நீ வர வேண்டும். தமிழே வரவேண்டும் என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

'தளைகள் அறுபடத்

தமிழ்த்தாய் விடுபட

கலைகள் ஆயிரம்

தமிழினில் வெளிப்பட" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ்தாயின் அடிமைத்தனம் விடுபடவேண்டும். அப்பொழுதுதான் தமிழ்மொழியும்இ தாய்மொழியும்இ விடுபடும். அப்பொழுதுதான் கலைகள் செழிக்கும் தமிழ்மூலம் தமிழ்க்கைலைகள் ஆயிரம் வெற்றி பெறும். எனத் தணிகைச் செல்வன் கூறுகிறார்.

## தமிழ்க்களமே மொழிப்பற்று

'என் மொழியில் என் மக்கள்

என் நாட்டில் கல்வி பெற

வன்முறையும் அறப்போரே

வா! என்று வாளெடுத்து

வேரதிர வைத்தாய் நீ"

கண்ணெதிரே காணுகிற

கயமைகளில் தோலுரித்தாய்" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் தாய்மொழியில்தான் கல்வி கற்க வேண்டும். அதற்காக அறப்போர்களைச் செய்திட வா என்று தணிகைச் செல்வன் அழைக்கிறார். ஆரியத்தை வேரோடு அகற்ற வாளெடுத்து வரவேண்டும் என்று தமிழை அழைக்கிறார். மேலும்இ கண்முன்னே தமிழுக்கு நடைபெறும் கயமைகளை நீ தோல் உரித்தாய் என்று தணிகைச் செல்வன் குறிப்பிடுகிறார்.

'தமிழ் மொழியானது நமது மேன்மைக்கு நமது

தகுதிக்கு முற்போக்கு ஏற்ற மொழியாகும். மேலும்

இந்திய நாட்டுப் பிற மொழிகளைவிட நாகரிகம்

பெற்று விளங்குகிறது" (கமலக்கண்ணன்.ப 2001)

தமிழ் மொழியானது நமது முன்னேற்றத்திற்கும்இ மேன்மைக்கும் தகுதி வாய்ந்த மொழியாக உள்ளது. முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட மொழியாக உள்ளது. இந்திய நாட்டில் உள்ள மற்ற மொழிகளை விட நாகரிகம் பெற்றுச் சிறப்பாகவும் தகுதிவாய்ந்த மொழியாகவும்இ தமிழ் விளங்குகிறது எனக் கமலக் கண்ணன் கூறுகிறார்.

'மொழியை விடவும்

மேலானது

மொழி உணர்வு" (தணிகைச்செல்வன்., 2001)

நம்முடைய தாய்மொழியை விட மிகவும் மேம்பட்டுச் சொல்லப்படுவது மொழி உணர்வு அதிலும் தமிழ்மொழி உணர்வு கொண்டவேனே சிறந்தவன் என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

'எனவே

தமிழை விடவும் தலையாயது

தமிழுணர்வு" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழைவிடச் சிறப்பானது அதன் மேல் கொண்ட உணர்வு சிறப்பாகக் காட்சி தரும். என்னுடைய சுடமை தமிழின் உணர்வு சிறக்கச் செய்வதுதான் தமிழ்.

'மொழி உணர்வு

இறந்த தேசத்தில் மொழியும்

இறந்துவிடும்" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ் மொழிப்பற்று கொண்டவர்களுடைய உணர்வுகள் இறந்துவிட்டால் நம்முடைய தாயமொழியான தமிழும் இத்தேசத்தில் இறந்துவிடும்.

'தமிழுணர்வு

இழக்கும் நாட்டில் மிஞ்சுவது

தமிழின் சவமே" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ் உணர்வு கொண்ட இந்த நாட்டில் உணர்வு இல்லையென்றால் தமிழின் சவமே இங்கு மிகுதியாகக் காணப்படும். தமிழ் உணர்வு கொண்டு தமிழ் சிறக்க நாம் பாடுபட வேண்டும். எனத் தணிகைச் செல்வன் கூறுகிறார்.

'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே

மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே!

வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!

நம்முடைய வாழ்வு சிறக்க வேண்டுமென்றால் தமிழ் செம்மையற வேண்டும் மாண்புகள் அனைத்தும் பெற்றவள் நீயே. வீழ்வானணத் தலை திர்ந்து தமிழ்த்தாய் அன்னையாக வழிபடும் வீரனின் வீரத்திற்கும் வெற்றிக்கும் காரணமாய் இருப்பவரும் தமிழ்த்தாயே என்று பாரதிதாசன் கூறுகிறார்.

'தமிழ் உணர்வுக்கும்

இன உணர்வுக்கும்

ஒற்றைப் பெயர்

தமிழியம்" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ்மொழி உணர்வுக்கும் இன உணர்வுக்கும் ஒரு பெயரை நாம் கூற வேண்டுமென்றால் 'தமிழியம்" என்று கூறலாம். தமிழர்கள் அனைவருக்கும் தமிழ் உணர்வும் தமிழ் மீதான இனப்பற்றும் இருக்க வேண்டும்.

'தமிழோடு

வாழாத தமிழன்

அலியாவான்" (தணிகைச்செல்வன்., 2001)

தமிழ் மொழியை இகழ்ந்து பேசி வாழு தமிழன் மனித ஜாதியில் ஆணும் அல்லாதஇ பெண்ணும் அல்லாதஇ மூன்றாவது இனமான அலியாவான் என்று கூறுகிறார் தணிகைச்செல்வன்

## முடிவுரை

மொழி விடுதலை என்னும் தமிழ் மொழியின் பெருமை. தமிழ்ப்பற்றுஇ தமிழுணர்வு ஆகியன பற்றியெல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பாரதியார் பாரதிதாசன்இ முடியாசன் போன்ற கவிஞர்கள் தமிழைத் தென்னகத்திலும் பாரதத்திலும் முதன்மையாக்க வேண்டும் என்று கூறத் தணிகைச் செல்வனோ அதினினும் ஒருபடி மேலே போய் உலக அரங்கில் தமிழை நிலைபெறச் செய்ய வேண்டும். என்று குறிப்பிடுகிறார்.

பாரதிதாசன் 'தமிழியக்கத்தில்" தமிழர்களில் நிலையைச் சாடுவதைக் காட்டிலும் மிக்க கோபமுற்று தமிழோடு வாழாதவன் அலிக்கு நிகரானவன் என்று பாடுகிறார். தமிழை முதல் மொழியாக்கி இரண்டாம் மொழியாக இந்தியையோ ஆங்கிலத்தையோ புகுத்துவது கூடாது என்றும் எங்கும் ஒரே மொழியில் கல்வி அதுவும் தமிழில்தான் இருக்க வேண்டுமென முழக்கமிடுகிறார். தணிகைச் செல்வன் இரண்டாம் மொழி எனப் பிறமொழிகளைக் கொண்டு வருவதால்தான் மொழிகலப்பு ஏற்பட்டு மொழி சிதைகிறது என்ற எண்ணம் இவரிடம் மேலலோங்கிக் காணப்படுவதையும் அறியமுடிகிறது. எங்கும் தமிழ்இ எதிலும் தமிழ்இ எல்லாம் தமிழ் என்பதே இவரின் முழக்கமாக இவரது பாடல்களில் அமைந்துள்ளது.

## References


Bharathiar, (1998) Bharathiar Poems, Manivasagar Publishing House, Chennai.

Kamalakkanan, P. (2001) Periyar's Thoughts on Literary Languages, Social Justice Publishing House, Salem.

Krishnan, P. (2000) Tamil Language in Tamil Books, Tamil Identity, Tamil Nadu, Meyyappan Tamil Research Center, Chidambaram.

Nannan, M. (1998) Periyar Computer Collection-2, Sunday Publishing House, Chennai.

Thanikaichelvan (2001) Thanikaichelvan Poems, Thanika Library, Chennai.

Vaithilingam, M. (1991) Ten Books of Bharathidasan, Thenmozhi Publishing House, Salem.

Varadarasan, M. (1981) History of Language, Saiva Siddhanta Publication House, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License